பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 05 புதன்கிழமை 19.06.2024 கதிர் 224

## பாலினச் சமத்துவச் சட்டமூலம்

# உயர் நீதிமன்றத்தை நேற்று ஒரு பிடிபிடித்த ரணில்

**பாலினச்சமத்துவச்சட்டமூலம் தொடர்பில்உயர்நீதிமன்றத்தின் கருத்தை ஆட்சேபித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று கடும் காரசாரமான கருத்துக்களை வெளிப்படுத்தினார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆற்றிய விசேட உரையின்போதே இதனைத் தெரிவித்தார்.**

☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில்விக்கிரமசிங்கபோட்டியிடுவாரா இல்லையா என்பது தொடர்பான சர்ச்சை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. பொது வேட்பாளராகத் தான் களமிறங்குவார் என்றும் பொதுஜன பெரமுன கட்சி அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சியின் தலைவர்களான ராஜபக்சக்களுக்கு ரணில் செய்தி அனுப்பிவிட்டார் என்றும் ஒருபுறம் தகவல்கள் வெளியாகி வந்தாலும், மற்றொருபுறம்ரணில்போட்டியிடுவது நிச்சயமில்லை என்றும் கூறப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் இன்றி பதவிக் காலத்தை நீடிப்பதற்கு ரணில் ஏதாவது தந்திரம் செய்யக்கூடும் என்கிற எதிர்பார்ப்பில் தொடர்ந்தும்ஆராயப்பட்டுவருகின்றது. ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனுத் தாக்கலுக்கான இறுதித் தினம் வரை ரணில் என்ன செய்யப் போகிறார் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்வது முடியாத காரியமாகவே அவருக்கு நெருக்கமானவர்களால் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகள்மற்றும்பொதுஜன பெரமுனவைமட்டுமன்றித்தன்னைச் சுற்றியுள்ளவர்களையும்

☞ 2

## சூட்சுமமாகப் பந்து வீசுகிறார் ஜனாதிபதி விக்கிரமசிங்க

### விமல் வீரவன்ஸவின் கணிப்பு இது

ஜனாதிபதி சூட்சுமமாகப்பந்துவீசுகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் உரையை மேற்கோட்காட்டி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மிகவும் சூட்சுமமான முறையில் பந்து வீசுகின்றார். இதில் முதாவது பந்து வீச்சாக பெண்களை வலுப்படுத்தும் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தைசவாலுக்கு உட்படுத்தும்வகையில் ஜனாதிபதியின் கருத்து உள்ளது. சூட்சுமஞானம் இருப்பதால் இதனை தந்திரம் குணம் என்று குறிப்பிடலாம்.

அடுத்ததாக கொவிட் காலத்தில் முஸ்லிம்களின்

☞ 8

## இலங்கை பெண்களுக்கு சம உரிமை கிடையாது

### ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

உயர் நீதிமன்றத்தின் தலையீட்டால்இலங்கையில் பெண்களுக்குச்சமஉரிமை இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளதுஎனஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கியதேசியக்கட்சியின் புதிய மறுசீரமைப்பின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளபிராந்திய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில்இடம்பெற்றது. இந்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின்கீழ்நியமிக்கப்பட்ட புதிய பிராந்திய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் இரண்டாம் கட்ட நிகழ்வில் இன்று கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண், பெண் சமத்துவச் சட்டமூலம் குறித்து பாராளுமன்றத்தில் இன்று நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. ஆனால் அதுதொடர்பில் கிடைத்துள்ள உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி பெண்களுக்கு சம உரிமை இல்லை.

நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களால் அந்த உரிமையைப்

☞ 8

## பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு

### நாடாளுமன்றம் அருகே நேற்றுச் சம்பவம்

நாடாளுமன்றநுழைவாயில்அருகில் நேற்று வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைக்க பொலிஸார் நீர்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தனர்.

விரைவாக தொழில் வாய்ப்புகளை பெற்றுத்தருமாறு கோரி வேலையற்ற பட்டதாரிகள் நேற்றையதினம் நாடாளுமன்றச் சுற்றுவட்டப்பகுதியில் ஒன்றுகூடினார்கள். அதன் பின்னர் கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஆளும் தரப்புத் தமக்கு நியாயத்தை நிலைநாட்டாது விட்டால் நாடாளுமன்றத்தினை முற்றுகையிடுவோம் என்றும்

☞ 8

## மன்னார் காற்றாலைக்கு எதிரான மனு ஒகஸ்ட் 2 விசாரணைக்கு

மன்னார் - விடத்தல்தீவில் அதானி நிறுவனம்காற்றாலைமின்னுற்பத்திநிலையத்தை நிர்மாணிப்பதற்குஎதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் குமுதினி விக்ரமசிங்கஆகியஉயர் நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய ஆயத்தின் முன்பாக நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

☞ 8

## தொலைத்தொடர்பு சட்ட வரைவும் அரசமைப்புக்கு முரண்: நீதிமன்று

தொலைத்தொடர்புகள்திருத்தச்சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புடன்இணங்கவில்லை என உயர் நீதிமன்றம் தமக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள விதத்தில் சட்டமூலம் திருத்தப்பட வேண்டும் என சபாநாயகர் நாடாளுமன்றுக்கு அறிவித்தார்.

அத்துடன், இந்தச் சட்டமூலத்தின் சில சரத்துகள் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமென

☞ 8

## பாலின சமத்துவ சட்டமூலம் அரசமைப்புக்கு முழு முரண்

### உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவிப்பு

பாலின சமத்துவம் சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரண். சட்டமூலம் குறித்துஉயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை முறையாக செயற்படுத்தாமல் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது.

அத்துடன் ஒருசில உறுப்புரைகளை நிறைவேற்றுதாயின் அதற்கு மூன்றில்

☞ 8

## பல்கலைக் கல்வி சாரா ஊழியர்கள் போராட்டத்தை கைவிடவேண்டும்

### அழைப்பு விடுத்தார் கல்வி அமைச்சர்

பல்கலைக்கழககல்வி சாரா தொழிற்சங்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று காமினி வலேபொட எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக கல்விசார்ஊழியர்களின் கொடுப்பனவில் 25 வீத அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்கவே தமக்கும் அந்த 25 வீத கொடுப்பனவினை வழங்க வேண்டும் என கல்வி சாரா

☞ 8

## வசூலிக்காத வரியை அறவிட்டால் புதிய வரி ஏதுமே தேவைப்படாது

### நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

வரி செலுத்தாமல் இருப்பது, வரி செலுத்துவதை தவிர்த்து வருவதுமற்றும்வரிநிவாரணம் வழங்குதல் இவற்றை சரி செய்து கொண்டால், ஆளும் தரப்பு அறிமுகப்படுத்த இருக்கும்வரி தேவைப் படாது என நாங்கள் நம்புகிறோம் என்று எதிர்க்கட்சித்தலைரவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த புதிய வரி அதிகரிப்பு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

அரசவருமானத்தை அதிகரித்து ஒரு இலக்குக்கு கொண்டுவர வரி அதிகரிப்புபிரேரணைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் வரி செலுத்த முடியுமான பலர்வரிகொள்கைக்குள் உள்வாங்கப்படாமல் இருக்கின்றனர். அவர்களை உள்வாங்கிக்கொள்ளநடவடிக்கை எடுக்க வேண்டும்.

வரி அறவிடும் நடவடிக்கையைமிகவும் செயற்திறமையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுக்கவேண்டும். அதனை டிஜிட்டல் மயமாக்க வேண்டும்.இதன்மூலம் வரிசெலுத்துபவர்களை முறையாகஇனம்கண்டு அதன்நடவடிக்கைகளை சரியான முறையில் முகாமைத்துவம்செய்ய முடியும்.

கடந்தவருடம்

☞ 8

## சட்டமா அதிபரின் பதவி நீடிப்பு: ரணிலின் பரிந்துரை நிராகரிப்பு

சட்டமா அதிபரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய்ராஜரத்தினத்தின் சேவைக் காலத்தை 6 மாத காலத்துக்கு நீடிக்குமாறுஅரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி விடுத்திருந்த பரிந்துரை நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின்இந்த பரிந்துரைக்கு

☞ 2

## இனி இது .....

குழப்பும் உத்தியாக ரணில் இப்படி நடந்துகொள்கிறார் என்று சொல்பவர்களும் உள்ளனர். ரணிலின் இத்தகைய செயற்பாடுகளால் விரும்பத்தகாத எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மட்டுமன்றி பொஹொட்டுவவைச் சேர்ந்த சிலரும் கருத்துக் கூறுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார் என்பதாகச் செய்திகள்வெளியாகிக்கொண்டிருந்த நிலையில், திடீரென அவர் போட்டியிடமாட்டார் என்று மீண்டும்பேசப்படுவதற்கும், ரணில் எல்லாவற்றையும் குழப்புகின்றார் என்றும்கூறப்படுவதற்குக்காரணம் உண்டு.

கடந்த வாரம், வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடந்த இளைஞர் மாநாட்டின்போது, பங்கேற்பாளர்கள் கேள்விகளைக் கேட்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அப்போது ஓர் இளைஞர், ஜனாதிபதித் தேர்தல் குறித்து எழுப்பிய கேள்விக்கு ஜனாதிபதி சர்ச்சைக்குரிய பதிலைக் கொடுத்தார் என்று பரவலான தகவல் இருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் 2048 வரையான அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்திருந்தார். அதனால், 'நீங்கள் வென்றால் அந்த திட்டங்களையெல்லாம் செயல்படுத்தலாம். ஆனால் நீங்கள் தோற்றால் என்ன நடக்கும்?' என்று அந்த இளைஞன் ஜனாதிபதியிடம் கேட்டான். ஜனாதிபதியோ சிரித்துக்கொண்டே, 'தோற்பதாக இருந்தால் நான் போட்டியிடவேமாட்டேன்' என்றார். இந்தக்கருத்து அங்கு உடனடியாகச் சிரிப்பலையை வரவழைத்தாலும், அவரது கூற்றின் தீவிரத்தை அங்கிருந்த சிலர் உணர்ந்தனர்.

இந்த உரையாடலின் வீடியோ கிளிப்பை ஊடகங்கள் பெரும்பாலும் வெளியிடவில்லை. இருட்டடிப்புச் செய்துவிட்டன. இருந்தபோதிலும், 'நெத் நியூஸ் இணையத்தளம்' இந்த வார அரசியல் பேச்சில் இந்தச் சம்பவம் குறித்து விரிவாகத் தெரிவித்தது. ஆனால், ஜனாதிபதி செயலகத்தில் இருந்து இதற்கு எந்த விளக்கமும் மறுப்பும் கிடைக்கவில்லை.

ரணில் தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பது தொடர்ந்தும் சர்ச்சையாகவே நீடிப்பதற்கு இதுவுமொரு காரணமாயிருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்ததாவது:

சபாநாயகர் பாலினச் சமத்துவ சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபையில் அறிவித்தார். ஆனால் இது அரசமைப்பின் 4ஆவது பிரிவின் கீழான இந்த சபையின் அதிகாரங்களை மீறுவதாகும். எனவே அது குறித்து ஆராய தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

2011முதல்,பெண்கள்வலுவூட்டல் மற்றும் பாலின சமத்துவம் குறித்த தேசிய கொள்கை உள்ளது. ஐந்தாவது நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையிலும், பெண்கள் மாநாடுகள் மற்றும் நாங்கள் கையெழுத்திட்ட பல ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் அதற்கான பொறுப்பு ஆளும் தரப்பைச் சார்ந்துள்ளது.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு எதிரான கமலாவதி வழக்கில் தேசியக் கொள்கையை அமைச்சரவையின் அதிகார வரம்பிற்குள் மாத்திரம் பரிசீலித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அது நாடாளுமன்றத்தின்செயற்பாடாகும். இது அரசியல் விவகாரம். இதில் உயர்நீதிமன்றம்எந்த வகையிலும் தீர்ப்பளிக்க முடியாது. அவ்வாறு நடக்கும்பட்சத்தில்அவர்கள்நாடாளு மன்றத்தின் அதிகார எல்லைக்குள் நுழைவதாக அமையும்.

இரண்டாவதாக, பெண்களின் சமத்துவம் மற்றும் சமூக அந்தஸ்து சார்ந்து ஏராளமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நிரோஷன் அபேகோன் மற்றும் பொலிஸ் மா அதிபருக்குஎதிரானரத்நாயக்கதராங்க லக்மாலி வழக்கு விசாரணையில், மக்களின் கண்ணியம் மற்றும் நல்வாழ்வுஅடிப்படைஉரிமையாகும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல்பத்துநீதிபதிகள்கொண்ட குழுவின் முன்னிலையிலான சரத் ஜயசிங்க உள்ளிட்ட பல வழக்குகள் உள்ளன.

ஓர் அரசமைப்புத் திருத்தத்தின் பெறுமதியை அறிய, அதன் விளக்க உரைகளை மட்டும் நம்பியிருப்பது போதுமாதல்ல. சமத்துவக் கொள்கையை நிர்வகிக்கும் அடிப்படைக் கோட்பாடு அநீதியை தடுப்பதாக அமையுமென நீதியரசர் ஷிராணிபண்டாரநாயக்கவழங்கிய, கருணாதிலக்க - ஜெயலத் டி சில்வா வழக்குகளும் உள்ளன. அதனால் பாகுபாடு - பாரபட்ச செயற்பாடுகளுக்கு கடுமையாக எதிர்ப்பு வெளியிடப்படுகிறது.

இறுதியாக, பிரதம நீதியரசர் வழங்கியகுற்றவியல்சட்டத்திருத்தம் தொடர்பான விசேட தீர்மானமும் புறக்கணிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில்தான் நாம் பெண்கள் வலுவூட்டல்மற்றும்பெண்களுக்கான சமத்துவம் பற்றிப் பேசுகிறோம். ஆனால் ஐந்தாவது நிலையான அபிவிருத்தி இலக்குகளின்படி சிறுபான்மையினரும் பாகுபாடு இன்றி அரச சேவைகளைப் பெறக்கூடிய இயலுமை இருக்க வேண்டும்.அடிப்படைஉரிமைகளின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் சாதாரண அதிகாரங்களுக்கமைய அவற்றை செயற்படுத்த வேண்டும்.

ஆனால் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானம் இந்த அதிகாரங்கள் எவற்றையும் கண்டுகொள்ளாத வகையில்அமைந்துள்ளது. ஒருபுறம் நீதிமன்றம்இவைஎல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு தங்களுக்கு இதற்கான அதிகாரம் இருப்பதாகக் கூறிவருகிறது. இதனால், முன்னைய தீர்ப்புகள் அனைத்தும் கேள்விக்குறியாகிறது. நீதிமன்றம் வழங்கிய முந்தைய தீர்ப்புகள் அனைத்தும்தூக்கிஎறியப்பட்டுள்ளன என்றே கூற வேண்டும்.

இது நீதித்துறைக்கு கேடு விளைவிக்கும்செயலைசெய்துவிட்டு அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்வதைப்போல் உள்ளது. ஆனால் இந்த சபையில் அதைச் செய்ய முடியாது. பத்து நீதிபதிகள் கொண்ட குழுவையும் பிரதம நீதியரசரையும் மிஞ்சி அவர்கள் செயற்பட முடியுமா?

இந்தச் சட்டம் ஒரே பாலின திருமணம் மற்றும் பாலின சமத்துவத்தை அனுமதிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதற்கும் இந்த சட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதற்கு இடமளிக்கவும்கூடாது. அனைத்து சட்டங்களிலும் காணப்படும் சாதாரண சரத்துக்கள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளனர். அவற்றைநாம்உள்ளடக்கவில்லை. சட்டமூலத்தை சட்டமா அதிபரே இறுதி செய்கிறார்.

மற்ற சட்டங்களை விட இந்தச் சட்டம் மிகவும் பயனுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. அதுகுறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இறுதிச் செயற்பாடுகள் நீதிமன்றத்தின் பொறுப்பெனக் கூறப்பட்டுள்ளது. சாமர சம்பத் (இராஜாங்க அமைச்சர் அல்ல)- நீல்இத்தவெல ஆகியோரும் உண்மைகளை குறிப்பிட்டு கூறியுள்ளனர். அதேபோல் நாட்டின் திருமணச் சட்டங்களை ஒரு பகுதிக்காக மட்டும் மாற்ற முடியாது.

அத்தோடு முழுமையாக பிரிவெனா கல்விச் சட்டத்தை இதனால் ஒதுக்கிவிட முடியும் என்று கூறப்படுகிறது. எந்த அடிப்படையில் இதைச் செய்தார்கள் என்று தெரியவில்லை. அரசமைப்பின் ஒன்பதாவது சரத்தில் பௌத்த மதத்தின் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்த சட்டத்தை தயாரித்து அதை நடைமுறைப்படுத்த பங்களிப்பு வழங்கிய அமைச்சர் என்ற முறையில் எனக்கு அதுபற்றி தெரியும். அந்தச் சட்டம் அரசமைப்பின் ஒன்பதாவது பிரிவு மூலம் பாதுகாக்கப்படுகிறது. இதைப் போன்ற ஒரு சிறிய ஏற்பாடு அதை மாற்றும் என்று நினைக்கிறீர்களா? அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில சொற்பதங்களை உயர் நீதிமன்ற நீதிபதிகள் சிலர் விளங்கிக் கொள்ளவில்லை என்று நினைக் கிறேன்.

இந்த சபைக்கு வருவதற்கு முன் தாங்கள் விகாரைக்கோ, பிரிவெனாவிற்கோ சென்று இதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

இறுதியாக, உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் 1972 அரசமைப்புச் சட்டத் தினை திரும்பிப் பார்க்க வேண்டும். எந்தவொருஅதிகாரமும்அரசமைப்புச் சபை மற்றும் அது கட்டமைக்கப்பட்ட 1972 அரசமைப்பின் மூலம் நியாயப்படுத்தப்பட வேண்டும். அதனால் சட்டம் குறித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்க முடியாது. அதன் பெறுமதி பற்றிய ஆலோசனைகளை மட்டுமே வழங்க முடியும்.

இது முழுமையான அரசமைப்பு பரிசீலிப்பாகும். 1978 அரசமைப்பை உருவாக்குவதில், நீதித்துறையின் சுதந்திரம் மேலும் வலுப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக நமது அரசமைப்பு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் உயர் நீதிமன்றத்திற்குவழங்கப்பட்டுள்ளன.

ஆனால், 1972 இல் நாடாளு மன்றத்தில் ஒரு சட்டமூலத்தை சமர்பித்த பின்னர் இரண்டு வாரங்கள் கடக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை என்று டி.எஸ். பெர்னாண்டோவின் தீர்மானத்தை அறிவித்த வேளையில், அந்தத் தீர்மானத்தைப் இந்தச் சபை பொருட்படுத்தாமல் விட்டது. முன்னாள் ஜனாதிபதியும் நாடாளு மன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்காரவும் அந்தச் சபையில் அங்கம் வகித்தார்.

எனவே இது இந்த சபை அனுமதிக்கக் கூடாத சிக்கலான தீர்ப்பாகும். மேலும் இது குறித்து ஆராய ஒரு சிறப்புக் குழுவை நியமிக்குமாறு பரிந்துரைக்கிறேன். அதற்காக நீதிபதிகளை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இதை ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கலாம். அந்த தெரிவுக்குஅதிகளவில்நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களை நிய மிக்கவேண்டும்.

இருப்பினும், இது பெண்கள் சார்ந்த விடயம். இதனால், இந்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ள பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மேலும், மற்றுமொரு பெரும்பான்மையாக உள்ள பௌத்தர்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. எனவே இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த சபை தனது உரிமைகளை உறுப்படுத்த வேண்டும்.

நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். அடக்கம் செய்தல் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயின்போது இடம்பெற்ற விடயங்கள் என்ன என்பது பற்றி நிறைய கலந்துரையாடல்களும் மனவேதனைகளும் ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். அந்த விடயத்தில் நானும் தலையிட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? முதலில், அனைத்து நாடுகளும் அடக்கம் செய்வதை நிறுத்தியது.

அதன் பிறகு, உலக சுகாதார நிறுவனத்திடம் இந்த விடயம் முன்வைக்கப்பட்டது. ஆனாலும் இலங்கையில்நாங்கள்ஒருகுழுவை நியமித்தோம். துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் அடக்கம் செய்ய அனுமதிக்கக்கூடாது என்று குழு பரிந்துரைத்தது. உலக சுகாதார நிறுவனம் வேறுபட்ட கருத்தை எடுத்தது. ஆனால் பின்னர் உயர் நீதிமன்றம் அந்தக் குழுவின் பரிந்துரையை உறுதி செய்தது. எனவே அதை ஆளும் தரப்புப் பின்பற்ற வேண்டியேற்பட்டது. அப்போது மாற்று வழி இருக்க வில்லை. ஆனால் இப்போது அவை அனைத்தும் முடிந்துவிட்டது.

இவை அனைத்தையும் நாம் எதிர்கொண்டோம். இந்த நாட்டில் அடக்கப்படுவதா அல்லது எரிக்கப்படுவதா என்பதை தீர்மா னிக்கும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும். எனவே, இறந்தவரின்உடலைபுதைக்கவோ, தகனம் செய்யவோ அல்லது மருத்துவ பீடத்திற்கு தானமாக வழங்கவோ உரிமை வழங்கும் சட்டத்தை இவ்விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கொண்டு வரவுள்ளார்.

இந்த காலக்கட்டத்தில், முக்கியமாக முஸ்லிம் மக்களுக்குப் மனரீதியிலான பாதிப்புகள் ஏற்பட்டன. ஆனால் எனக்கு தெரிந்த இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் இறந்த பிறகு அடக்கம் செய்வதை விரும்புகிறார்கள். எனவே நடந்ததற்கு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இது தொடர்பாக முன்வைக்கப்படும் சட்டமூலத்திற்கு இந்தச் சபை ஆதரவளிக்கும் என்று நம்புகிறேன். உத்தேச வாடகை வருமானவரிகுறித்தும்இந்தசபைக்கு கருத்தை தெரிவிக்க வேண்டும். நாம் செல்வ வரியொன்றை அறிமுகப்படுத்துகிறோம். மேலும் அதன் வரையறை மிக அதிகமாக இருக்கும். எனவே, நாட்டின் 90 சதவீதமானவீடுகளுக்குஇதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே இதைப் பற்றி பொதுமக்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் வீடு பாதுகாப்பாக இருக்கும்.

ஆனால் தரவரிசையின் அடிப்படையில்எடுக்கப்படும்முடிவின் அடிப்படையில் வாடகை வருமான வரி விதிக்கிறோம். அதன் பிறகு எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. அந்த மதிப்பீடுகள் மாகாண சபைகளுக்கு சொந்தமானது. தரவரிசைப்பட்டியலின்படி இந்த வரி விதிக்கப்பட்டால், பெறப்படும் பணம் மாகாண சபைக்கு சொந்தமானது என்று நீதிமன்றம் கூறலாம்.

எனவே, அதற்கான அனுமதியை நாடாளுமன்றத்தில் பெறவேண்டும். வாடகை வருமான வரி என்ற வித்தியாசமான சூத்திரத்தைப் பயன்படுத்தியுள்ளோம். இந்த வருமான வரி மத்திய அரசுக்குச் சொந்தமானது. நாங்கள் பொதுவாக இந்த மதிப்பீடுகளைப் பயன்படுத்துகிறோம். தற்போதுள்ள சட்டச் சிக்கலைத் தீர்க்கவே இதைச் செய்தோம். ஆனால் வரிவரையறை மிக அதிகம் என்பதை குறிப்பிட வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள பெரும் பான்மையான மக்கள் தங்கள் வீடுகளைப் பற்றி கவலைப்பட வேண்டி ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் நாம் செல்வ வரி விதிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பல கோடீஸ்வரர்கள் தங்களுக்கும் வரி விதிக்கப்படுமோ என்று மிகவும் கவலைப்படுவதையும் நான் அறிவேன்.

மக்களின் இறையாண்மை பேணப்பட வேண்டும். அந்த இறையாண்மை நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதியிடம் உள்ளது. இந்த நேரத்தில் இரண்டு நிறுவனங்களும் ஒரே இடத்தில் உள்ளன. நாடாளுமன்றத்தின் மூலம் நீதித்துறைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. அதைத்தான் 1971 தேர்தலில் முடிவு செய்தோம். 1967 இல்லியனகேவுக்குஎதிரானரெஜினி வழக்கில், உயர் நீதிமன்றத்திற்கே இந்த அதிகாரங்கள் உண்டு என அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்துபெரும்விவாதங்கள் இடம்பெற்றன. இதனை 2/3 வாக்குகளால் மாற்ற முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள நாங்கள் தெரிவித்தோம். ஆனால் 2/3 ஐ வைத்து அதனை செய்ய முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆனால் 1970 இல், 2ஃ3 அந்த குழுவிற்கு கிடைத்தது. அதன்படி, இந்த அதிகாரம் அரசியலமைப்புச் சபையால் தயாரிக்கப்பட்ட அரசிய லமைப்பு மூலம் கிடைக்கிறது என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டோம். அந்த அதிகாரத்தைமக்கள்இறையாண்மை பெற்றுக்கொண்டது. நாங்கள் இதுவரை அதை மாற்றவில்லை.

ஆனால் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மக்கள் இறையாண்மைக்காக மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு கொண்டு வந்தோம். எனவே, இந்தச்சபையின் உரிமைகளில் நான் தலையிட விரும்பவில்லை. 1978 இல் நீதித்துறையின் சுதந்திரத்தை மேலும் வலுப்படுத்தினோம். இந்த வழக்கில், நீதிமன்றத்தின் அதிகாரத்தை நீதிமன்றம் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் இந்த நாட்டின் சட்டங்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்றன. அது தொடர்பில் யாரும் கேள்வி கேட்க முடியாது.

எனவே, சட்டம் அரசமைப்புக்கு முரணானதா இல்லையா என்பதை மாத்திரமே பரிந்துரைக்கவேண்டும். நாம்அரசியலமைப்புநீதிமன்றத்தை நிறுவியுள்ளோம். நியூசிலாந்து, பின்லாந்து போன்ற நாடுகளில், சட்டங்கள்அரசமைப்புக்குஇசைவாக உள்ளதா இல்லையா என்பது, நாடாளுமனறத் தெரிவுக்குழுவால் முடிவு செய்யப்படும்.

பின்னர் 1978 இல் இதற்கு தனி நீதிமன்றம் தேவையில்லை என்றும், அதனால்பணவிரயம்தான் ஏற்படும்என்றும்முடிவுசெய்தோம். உயர்நீதிமன்றத்தை மேலும் பலப்படுத்தி நாடாளுமன்றம் சார்பில் அதிகாரத்தை வழங்கியதையே நான் செய்துள்ளேன்.

நீதிமன்றம் வழங்கும் தீர்மானத்தின் மீது அமைச்சரவை முடிவெடுக்க முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு மற்ற கட்சியினர் பல்வேறு கருத்துகளையும், எதிர்ப்புகளையும் தெரிவித்தனர்.

ஆனால் ஒரு குழு மூலம் முடிவு எடுக்கப்பட்டது. எவ்வாறேனும் நீதிமன்றத்திற்குச் செல்லப்பட்டது. நீதிமன்றம் அதை உறுதி செய்தது. அதன்பிறகு, ஆளும் தரப்பைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

கடந்த காலத்தைப் பற்றிப் பேச நான் இங்கு வரவில்லை. எனக்கு அது தேவையில்லை. ஆனால் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டபோது யார் கதைத்தார்கள் என்று தேவைப் பட்டால் என்னால் கூற முடியும். அதையெல்லாம் மறந்துவிட்டு நாம் கலந்துரையாடி முன்னோக்கிச் செல்லலாம். இங்குஅடிப்படைவாதம் தேவையில்லை என்றார்.

## சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித் திருந்தனர்.

அரசமைப்பு பேரவை சபாநாயகர் மஹிந்தய யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று மாலை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடியபோதே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் சேவையை நீடிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரையை பரிசீலிப்பதற்காக அரசமைப்பு பேரவை இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் கூடியிருந்த போதிலும், இறுதித் தீர்மானத்தைஎடுக்கமுடியவில்லை. மூன்றாவது தடவையில் அதனை நிராகரித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஈரநில முகாமைத்துவம் தொடர்பான பொது தீர்வுகளில் கவனம் செலுத்துக

## உச்சிமாநாட்டில் பிரதமர் தினேஷ் குணவர்தன பரிந்துரை






ஒவ்வொருநகராஈரநிலமும்எதிர்கொள்ளும்பிரச்சினைகளின் பொதுவான தன்மையைக் கருத்தில் கொண்டு ஈரநில முகாமைத்துவம் தொடர்பான பொதுவான தீர்வுகளை எட்டுவதில் கவனம் செலுத்துமாறு ஈரநில மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்குப் பிரதமர் பரிந்துரைத்தார்.

சர்வதேச ஈர நிலப் பூங்கா ஒன்றியத்தின் ஆசிய மாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மாநாட்டின் ஆரம்ப விழா திங்கட்கிழமை காலை வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்றது.

சர்வதேச ஈரநில பூங்கா ஒன்றியத்தின் ஆஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஆசிய முதல் மாநாடு ஜூன் 21 வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் நடைபெறவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இதை ஏற்பாடு செய்கின்றது. உலகெங்கிலும் உள்ள பதினைந்து நாடுகளில் உள்ள எழுபதுக்கும் மேற்பட்ட ஈரநிலப் பூங்காக்களில் இருந்து கிட்டத்தட்ட நூறு பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். இலங்கை, கொரியா, மங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியன்மார், நியூஸிலாந்து, நேபாளம், ஜப்பான், ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தாய்வான், இங்கிலாந்து ஆகிய நாடுகள் மாநாட்டில் பங்கேற்றன.

ஈர நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும் மேம்படுத்துவதும் மாநாட்டின் நோக்கமாகும்.



ரம்சா பிராந்திய மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சூ செங் ஓஹ், சர்வதேச உறவுகள் முகாமையாளர் கிறிஸ் ரோஸ்டன் மற்றும் இலங்கை நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மேலதிக பொது முகாமையாளர் கலாநிதி என். எஸ். விஜேரத்ன உள்ளிட்ட உத்தியோகபூர்வமாக மாநாட்டை ஆரம்பித்தார்கள்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் மேலும் கூறியவை வருமாறு –

'ஈர நில உறவுகள் சர்வதேச – ஆசியா கண்டத்தின் உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொள்வதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈரநிலங்கள் மற்றும் ஈரநில மையங்கள்' என்ற கருப்பொருளின் கீழ் 15 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 ஈரநில வல்லுநர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு ஈரநில முகாமைத்துவம் குறித்த அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்த முக்கியமான விடயத்தில் ஆற்றிய பணிகளுக்காகவும், இந்த மாநாட்டை வெற்றியடையச் செய்ததற்காகவும் பிரசன்ன ரணதுங்க மற்றும் அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தவொரு பெரிய நகரத்திலும் வாழும் மக்களின் நல்வாழ்வுக்கு ஈரநிலங்கள் அவசியம். இந்த மாநாடு நமது வர்த்தக நகரமான கொழும்புக்கும் பொருந்தும் என்பதால் மிகவும் முக்கியமானது. இந்த ஈரநிலங்கள் நகரத்தின் மனித நல்வாழ்வுக்கு பங்களிக்கும் பல நன்மைகளை வழங்குகின்றன. கொழும்பு ஈரநில வளாகம் ஆறு உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ளது. நிர்வாக தலைநகரம் ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, கொழும்பு மாநகர சபை, கடுவெல மாநகர சபை, கொலன்னாவ நகர சபை, மஹரகம நகர சபை மற்றும் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களாகும். இந்த உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் கீழ் வரும் நகர ஈரநிலங்கள், நகரத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் முக்கிய அங்கமாகும். 150 ஆண்டுகள் பழைமையான ஈர நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு இன்னும் 150 ஆண்டுகள் நீடிக்கும் என்பது உறுதி. பிரதமர் என்ற ரீதியில், உள்ளூராட்சிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், இந்த விடயத்தில் நான் குறிப்பாக ஆர்வமாக உள்ளேன்.

காலநிலை மாற்றத்தின் விளைவுகள் தெற்காசியா முழுவதும் தீவிரமடைந்து வருகின்றன. எமது பிரதேசங்களில் ஊடகங்களின் மூலம் அழிவுகரமான விளைவுகளை நாம் ஒவ்வொரு நாளும் பார்க்கிறோம். காலநிலை மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தது போல், காலநிலை மாற்றம் தொடர்பில் இலங்கை மிகுந்த அவதானம் செலுத்தி வருகின்றது. கொழும்பின் ஈரநிலங்கள், வெள்ளத்தால் பாதிக்கப்படும் நகரம் எதிர்கொள்ளும் எதிர்கால சவால்களைத் தணிக்க இன்றியமையாத வளமாக மாறி வருகின்றன. கனமழையின் போது, நகரின் ஈரநிலங்கள் மில்லியன் கன மீற்றர் தண்ணீரை சேமிக்கின்றன. நீர்ப் பம்பி போன்ற பசுமை, உள்கட்டமைப்பு வசதிகள் (புயல் நீர் முகாமைத்துவத்துவத்துக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள்) எங்கள் தலையீடுகள் மற்றும் முதலீடுகள் நகரத்தை மேலும் நெகிழ்ச்சியடையச் செய்து மாற்றுத் தீர்வுகளுக்குத் திரும்புகின்றன.

நகரா ஈரநிலங்களைபுத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதைஅங்கீகரிக்கும்வகையில், 2018 ஆம் ஆண்டில் ரம்சா ஈரநில நகரம் அங்கீகாரத் திட்டத்தால் கொழும்பு ரம்சா ஈரநில நகரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மிக முக்கியமாக, ஈரநில நகரமாக அங்கீகரிக்கப்பட்ட முதல் தலைநகரம் கொழும்பு ஆகும். சுற்றுலா என்பது பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது என்பதோடு நிலையான சுற்றுலா என்ற கருத்து உலகளவில் சமீபத்திய ஆண்டுகளில் கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளது.

சுற்றுலா என்பது பல முக்கிய உலகளாவிய இலக்குகளை அடைவதற்கு பங்களிக்கும் ஒரு முக்கிய துறையாகும். பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை சமநிலைப்படுத்த முயலும் நிலையான அபிவிருத்தி, 1992 ரியோ புவி உச்சி மாநாட்டிலிருந்து முக்கிய கவனம் செலுத்துகிறது. எனவே, ஈரநில உறவுகளுக்கான முதல் சர்வதேச ஆசியா கண்டங்கள் மாநாட்டின் கருப்பொருள், 'சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈரநிலங்கள் மற்றும் ஈரநில மையங்கள்' என்பது நிலையான வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் ஆணை மற்றும் முயற்சிகளுக்கு மிகவும் பொருத்தமானது. மிக முக்கியமாக, நகர்ப்புற சூழலில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துவதில் ஈரநிலப் பூங்காக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கொழும்பு நகரின் பிரதான ஈரநில மையமான தியசரு பூங்கா, ஈரநிலப் பாதுகாப்பு மற்றும் வசிப்பிட சமூகங்களின் தொடர்பு, கல்வி, பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வின் மூலம் புத்திசாலித்தனமான பயன்பாடு ஆகியவற்றின் மூலம் சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் முக்கியமான மற்றும் பொருத்தமான இடமாகும். ஈரநிலங்கள் அசுத்தமான நீரைச் சுத்தப்படுத்தவும், மீன், பறவைகள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கான இனப்பெருக்கத் தளங்களை வழங்குவதன் மூலம் பல்லுயிர் பெருக்கத்தை ஆதரிக்கவும் கடற்பாசியாக செயற்படுகின்றன.

இது இறுதியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே சுற்றுச்சூழல் சுற்றுலாவுக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கும். நகர மையங்களுக்கு அருகில் உள்ள ஈரநிலங்கள் குடியிருப்பு, தொழில்துறை மற்றும் வணிக வசதிகளின் வளர்ச்சி அழுத்தத்தில் உள்ளன. எனவே, நகர ஈரநிலத்தின் ஒவ்வொரு பகுதியும், எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சரி, சிறியதாக இருந்தாலும் சரி, முக்கியமானது என்பதுடன் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் கூட்டாகச் சுமக்க வேண்டும்.

நகர ஈரநிலங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பொதுவானவை என்பதில் சந்தேகமில்லை, மேலும் அவை இங்கு பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அனைத்து நகரங்களுக்கும் பொதுவானவை என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனவே, தீர்வுகளின் பொதுவான தன்மையைக் கருத்தில் கொள்ளுமாறு மதிப்பிற்குரிய அறிஞர்களிடம் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாநாட்டில் பங்கேற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர். எஸ். சத்யானந்தா கூறும்போது –

'ஈரநில மாநாட்டை நடத்துவது இலங்கைக்கு கிடைத்த பெரும் பாக்கியம். ஒரு நாடாக, இந்த மாநாடு நகர ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு புதிய தொடக்கமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள், உலகம் முழுவதும் உள்ள ஈர நிலங்களைப் பாதுகாக்க சிறப்பான உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

இயற்கை அனர்த்தங்களின் போது கொழும்பு நகரைப் பாதுகாப்பதில் ஈரநிலங்கள் சிறப்பான பங்காற்றுகின்றன. நகர ஈரநிலங்கள் சுற்றுச்சூழல் ஆய்வு மையங்களாகவும் உள்ளன. நகர அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சு என்ற வகையில், ஈர நிலப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். அதனால்தான் நகரத் திட்டமிடலில் ஈரநிலப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். எதிர்காலத்தில் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க ஓர் அரசாங்கமாக நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று வலியுறுத்தினார்.

இயற்கை அனர்த்தங்களின் போது கொழும்பு நகரைப் பாதுகாப்பதில் ஈரநிலங்கள் சிறப்பான பங்காற்றுகின்றன. நகர ஈரநிலங்கள் சுற்றுச்சூழல் ஆய்வு மையங்களாகவும் உள்ளன. நகர அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சு என்ற வகையில், ஈர நிலப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். அதனால்தான் நகரத் திட்டமிடலில் ஈரநிலப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். எதிர்காலத்தில் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க ஒரு அரசாங்கமாக நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று வலியுறுத்தினார்.'

இங்கு, கிழக்கு ஆசியாவிலுள்ள ரம்சா பிராந்திய மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சு சேன்ங் ஓஹ் தினேஷ் குணவர்தனவுக்கு நினைவுப் பரிசை வழங்கினார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஸ் ஹேரத், சுற்றாடல் ஆர்வலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே அவசியத் தேவை

பருவ கால மாற்றங்களைப் போன்று இந்திய மீனவர்களின் எல்லைமீறிய மீன்பிடிப் பிரச்சினையும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது தீர்வு ஏதும் இன்றி. கடந்த இரண்டு மாதங்களாக ஓய்ந்திருந்த இந்தப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியுள்ளது. இதனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மீனவர்கள் நேற்று இந்தியத் துணைத் தூதரகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மீன்களின் இனப்பெருக்கத்திற்கு உதவியாக இந்தியாவில்கடந்த இரண்டுமாதங்களாகமீன்பிடித்தடை நடைமுறையில் இருந்தது. அதனாலேயே அத்துமீறலும் இல்லாமல் இருந்தது. தடைக் காலம் முடிந்து இந்திய மீனவர்கள் மீண்டும் கடலில் இறங்கியதைத் தொடர்ந்து பழையபடி பிரச்சினை தொடங்கிவிட்டது. அத்துமீறலைத் தடுக்கவேண்டும் என்றும், அத்துமீறும் மீனவர்களைக் கைது செய்ய கடற்படையும் மீன்பிடித்துறை அமைச்சும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மீனவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் 182 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களிடமிருந்து 24 மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.


நேற்றுசெவ்வாய்க்கிழமைகூடயாழ்ப்பாணம்காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் படகுடன் கைது செய்யப்பட்டனர். அவ்வப்போது கைதுகள் தொடர்ந்தாலும், சட்டங்கள் இறுக்கப்பட்டு படகுகள் பறிமுதல் செய்யப்படுவதுடன் படகு உரிமையாளர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டாலும் அத்துமீறல் நிற்பதாக இல்லை.

இந்திய மீனவர்கள் அத்துமீறலுக்காக 1980களின் பிற்பகுதியில் கைது செய்யப்படத் தொடங்கினார்கள். அதன் பின்னர் ஆயுதப் போரின் தீவிரம் காரணமாக கட்டுப்பட்டிருந்த அத்துமீறல், போர் முடிந்த பின்னர் மீண்டும் தீவிரமடைந்தது. அதற்கொரு தீர்வு காணுமாறு ஒரு தசாப்தத்திற்கும் மேற்பட்ட காலமாக வடக்கு மீனவர்களும் போராட்டங்கள் நடத்துகிறார்கள். ஆனால் பயன் ஏதும் இல்லை.

மீனவர்களுக்கு மத்தியிலான பேச்சுக்கள், அரசுகளுக்கு இடையிலான பேச்சுக்கள் பல சுற்று நடத்தப்பட்டபோதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. பருவ மாற்றம் போன்று அது தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. அண்மையில் மன்னாருக்கு வந்திருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில்பாலம்அமைப்பதற்கானசாத்தியக்கூறாய்வுகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என்று மன்னார் ஆயரிடம்தெரிவித்திருந்தார். பாலம்கட்டுவதற்குமுன்னர் பாலத்திற்குக் கீழே காணப்படும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது மிக முக்கியமானது என்பதை அரசுத் தலைவருக்கு யாராவது உணர்த்துவது சிறந்தது.

மீன்பிடித்துறை அமைச்சராக தமிழர் ஒருவர் இருக்கின்றபோதும் இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான ஒருதீர்வை அவராலும் காணமுடியவில்லை. மீனவர்கள் துண்டாடப்பட்டு தூண்டப்பட்டு பல போராட்டங்கள் நடப்பதைத் தவிர வேறெந்த வளர்ச்சியும் இது விடயத்தில் ஏற்படவில்லை. எனவே மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையான இந்திய அத்துமீறலைத் தடுத்து நிறுத்த அவ்வப்போது போராட்டங்கள் நடத்துவதற்கு அப்பால் தீர்க்கமான, நிரந்தரமான ஒரு முடிவு எட்டப்படவேண்டும். அதன் மீது அனைத்துத் தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும்.

# நியூசிலாந்தின் நடை மரமும் கோரி மரமும்!





**சு. இராமசுப்பிரமணியன்**

நியூசிலாந்து நாட்டின் தேசிய மரமாக இந்த ஆண்டு 'வடக்கு ராட்டா' வகையைச் சேர்ந்த 100 அடிக்கும் மேலாக உயரம் கொண்ட மரம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மரம் 150 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. அந்த மரத்தின் அடிமரம் இரண்டாகப் பிளவுபட்டு மனிதர்களின் இரண்டு கால்கள்போல இருக்கின்றன. உயரமான ஒரு மனிதன் இரண்டு கால்களில் நின்றுகொண்டிருப்பதுபோலவே அம்மரம் தோற்றம் தருகிறது.

திறந்தவெளியில் நிற்கும் அம்மரத்தைத் தொலைவிலிருந்து நோக்கும்போது அது நடப்பது போலவேகாணப்படுகிறது. அதன்பொருட்டேஅதற்கு 'நடை மரம்' (நடக்கும் மரம் - முழியிவஷ்ஜஆ மிஷளள) என்று பெயர் சூட்டப்பட்டது. 100 அடிக்கும் மேலாக வளரும் மரம் என்பதோடு அது பூ பூக்கும் இனமும் ஆகும். சுமார் 1,000 ஆண்டுகள் வரையிலும் வாழக்கூடியது. அதன் வேர்களும், மனிதக் கைகளைப்போன்ற கிளைகளும் பார்ப்பதற்கு இ.என்.டி. போலவே தோற்றமளிக்கும். சுமார் 6,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பூமியின் முதன்மையான பகுதி 'நடு-பூமி'. அது ஆர்டா என்று அழைக்கப்பட்டது. அந்த நடு பூமியில் வனங்களைப் பாதுகாத்த மரம் போன்று தோற்றமளிக்கும் கற்பனை உயிரிகள் இ.என்.டி. என்று அழைக்கப்பட்டன.

'நடை மரம்' ஒரு மிகப்பெரிய குதிரை மைதானத்தில் தனியாக நின்றுகொண்டிருக்கிறது. 105 அடி உயரம் கொண்ட அம்மரம், ஏழு மாடிக் கட்டடம் அளவிற்கு ஓங்கி உயர்ந்து நிற்கிறது. அதன் உண்மையான வயது தெரியவில்லை. 150 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடும்பத்தினரால் அக்காடு அழிக்கப்பட்டிருக்கிறது. அதில் தப்பிப் பிழைத்து வளர்ந்திருக்கிறது இந்த மரம் என்று அக்குடும்பத்தினர் கூறுகின்றனர்.

'வடக்கு ராட்டா மரம்' எபிபைட்டிக்ஸ்



(epiphytes) இனத்தைச் சேர்ந்தது. இது ஒரு விதத்தில் நம் ஊர்களில் பனைமரத்தில் முளைத்து வளரும் ஆல், அத்தி, அரசு மரங்கள் போன்றது.

### வடக்கு ராட்டா மரம்

ஏதேனும் ஒரு மரத்தின் புறப்பரப்பின் மீது முளைத்து வளர்கிறது. பிறகு விழுதுவிடுகிறது. கீழ்நோக்கித் தொங்கிக்கொண்டிருக்கும் அவ்விழுதுகள் இறுதியாகத் தரையைத் தொட்டு, பூமிக்குள் இறங்கிவிடும். பிறகு மரம் மேல்நோக்கி வளர ஆரம்பிக்கும். விழுதுகள் பூமிக்குள் இறங்கும் வரையிலும் காற்றிலும், மழை நீரிலும் வளர்கிறது. அந்தவகையில் இது ஒட்டுண்ணி மரம் அல்ல. எந்த மரத்தைச்சுற்றி இம்மரம் வளர்ந்ததோ அம்மரம் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்துபோயிருக்கலாம். 'நடை மரம்' மிகப்பெரிதாக இருந்ததால் அல்லது மற்றொரு மரம் வீழ்ந்ததால் அடிமரம் இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. அதுதான் மனிதர்களின் இரண்டு கால்கள் போன்ற தோற்றத்தைத் தந்திருக்கிறது.

### பழமையான கோரி மரம்

நியூசிலாந்து நாட்டில் புவிக்காந்த வரலாற்றுடன் தொடர்புடைய பழமையான மற்றொரு மரமும்



உள்ளது. அதுதான் கோரி மரம். பூமி ஒரு சட்டக்காந்தம்போல் செயல்படுகிறது என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும். புவிக்காந்த வடதுருவம் தெற்கிலும், புவிக்காந்தத் தென்துருவம் பூமியின் வடக்கிலும் உள்ளன என்பதையும் படித்திருப்போம்.

### கோரி மரம்

நாம் நினைப்பதுபோல், வடக்கிலும் தெற்கிலும் அமைந்திருக்கும் பூமியின் காந்தத் துருவங்கள் நிலையானவை அல்ல. மாறாக, புவிக்காந்தத் துருவங்கள், பலஆயிரம்ஆண்டுகளுக்குஒருமுறை வடக்கிலிருந்து தெற்கிற்கும், தெற்கிலிருந்து வடக்கிற்கும் திசைமாறிக்கொள்கின்றன. அப்படி, திசைமாறுவதற்கான காலம் 1000 ஆண்டுகள் என்னும் அளவிற்கும் மேலாக மிகநீண்ட காலகட்டமாக இருக்கிறது.

பறவைகள், கடலில் வாழும் சால்மோன் மீன், கடல் ஆமை, திமிங்கலம் மற்றும் பட்டாம் பூச்சிகள், புவிக்காந்தப்புலத்தைப் பயன்படுத்தி திசையறிந்து இடம்பெயர்கின்றன. இந்த உயிரினங்கள் துருவமாற்ற காலத்தில் குழம்பி விடுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

42,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த ஒரு துருவமாற்றம் 41,000 ஆண்டுகளில் முடிவடைந்திருக்கிறது. அதாவது, அம்மாற்றம் ஆரம்பித்து, முடிவதற்கு 1000 ஆண்டுகள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# நியூசிலாந்தின் நடை மரமும் கோரி மரமும்!

4ம் பக்க தொடர்ச்சி...........

ஆகியிருக்கிறது. அது, 'லேஷ்சாக் விளைவு' என்று அழைக்கப்படுகிறது. அதன் பக்கவிளைவாக, பூமியில் வாழ்ந்த உயிரினங்கள் பேரழிவைச் சந்தித்திருக்கின்றன மிகப்பெரிய சுற்றுச்சூழல் சீர்கேட்டையும், அந்நிகழ்வு ஏற்படுத்தியிருகிறது. உலகில் இன்றும் காணப்படும் வயது மூத்த மரங்களில், நியூசிலாந்து நாட்டின் கோரி மரமும் ஒன்று.

கோரி மரங்கள், 'லேஷ்சாக் விளைவிற்கும் முந்தியவை என்று தெரியவந்துள்ளது. எனவே, 42,000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த 'லேஷ்சாக் நிகழ்விற்கு, கோரி மரங்கள் சான்றாகும்.

### வடக்கு ராட்டா மரம்

நியூசிலாந்து நாட்டின் வடக்கில் அமைந்துள்ள 'கவா சதுப்பு நிலக்காடுகளில்', புதையுண்ட கோரி மர எச்சங்கள் , 'லேஷ்சாக் நிகழ்வுக்கும் முந்தியவையாக உள்ளன. பரிணாம உயிரியலாளர் ஆலன் கூப்பரும் அவரது குழுவினரும், 42,000 ஆண்டுகளுக்கு முந்தைய அப்படிப்பட்ட நான்கு கோரி மரத் தடிகளின் குறுக்குவெட்டுப் பகுதிகளை, கரி -14 ஆய்வுக்கு உட்படுத்தினர். இந்த ஆய்வுதான், முதன்முதலாக துருவமாற்றத்தை நேரடியாக சுற்றுச்சூழல் மாற்றங்களுடன் தொடர்புப்படுத்திப் பேசுகிறது. ஆய்வு முடிவுகள் 2021 பெப்ரவரி 19 'சையின்ஸ்' இதழில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

துருவமாற்ற நிகழ்வு காரணமாக, புவிக்காந்தப்புலம் வலுவிழந்தது. புறவெளியிலிருந்து வரும் காஸ்மிக் கதிர்களின் செறிவு கூடியது. அதன் காரணமாக, கோரி மரத்தில் கரி-14, அதிக அளவில் படிந்திருந்தது. வலுவிழந்தக் காந்தப்புலம், வளிமண்டலத்தில் என்ன விதமான மாற்றங்களை, காலம் சார்ந்து நிகழ்த்தும் என்பதை, கணினியைப் பயன்படுத்தி ஆலன் கூப்பர் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

துருவமாற்ற காலகட்டத்தில், அதிகப்படியாகப் பூமிக்கு வரும் மின்னூட்டம்பெற்ற துகள்கள், வளிமண்டலத்தில் அதிகளவில் ஹைட்ரஜனையும், நைட்ரஸ் ஆக்சைடையும் உருவாக்குவது தெரியவந்தது. இந்த வாயு மூலக்கூறுகள் ஓசோன் வாயுவை உட்கவரும் பண்புகொண்டவை. அதன் விளைவாக, ஓசோன் அடுக்கு வலுவிழந்து சூரியனிலிருந்து அதிக செறிவுள்ள புறஊதாக்கதிர்கள் பூமியை வந்தடைந்திருக்கின்றன. அதுமட்டுமன்று சூரியக்கதிர்களை உள்கவரும் பல்வேறு வளிமண்டல அடுக்குகளும் வலுவிழந்து, ஆற்றல்மிக்க சூரியக்கதிர்கள் பூமிக்கு நேரடியாக வந்து சேர்ந்திருக்கின்றன.

# தமிழ் மொழியின் பற்றாளர்களாக, உணர்வாளர்களாக இளைய தலைமுறையினரை வளர்த்தெடுக்கவேண்டும்

## அருட்பணி அருட்செல்வன் அறிவுரை



இளைய தலைமுறையினரை தமிழ்மொழியின் பற்றாளர்களாக உணர்வாளர்களாக வளர்க்க வேண்டும். தமிழர்கள் போரில் தேற்றுப்போன இனம் என்று கருதப்பட்டாலும் நாம் தோற்றுப்போன இனம் இல்லை என அருட்பணி அருட்செல்வன் தெரிவித்தார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பொன்விழாவின் 17ஆவது சர்வதேச மாநாடு அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

நான் தமிழன், எங்கள் மொழி தமிழ்மொழி, தமிழ் இனத்தவன் என்கின்ற மாபெரும் சமூகத்திலே நாங்கள் நீந்திக்கொண்டிருக்கின்றோம் .

தமிழ் என்று சொல்லும்போது மொழியின் தொன்மை, பண்பாட்டு சிறப்புகள் நாங்கள் ஏற்றுக்கொள்வதன் மூலம் நாங்கள் தமிழனாக இந்த உலகிலே பூமி பந்தில் பிறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இங்கு பல மொழியியலாளர்கள், ஆராட்சியாளர்கள் கூட தமிழ் மொழியில் சிறப்பியல்புகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் நிலையிலே எம் இனம் தோற்றும் போன இனமாக பேரினிலே போராட்டத்திலே அழிவுகளைச் சந்தித்து நாங்கள் ஒடுக்கப்பட்ட தோற்றுப்போன விழிம்பிலே இருக்கிற இனமாகப் பார்க்கப்பட்டாலும், கருதப்பட்டாலும் நாங்கள் பண்பாடு சார்ந்த வாழ்வியலில் தோற்றுப் போன மக்கள் இனம் இல்லை மொழியினுடைய விசாலமான செழுமை சார்ந்து தோற்றுப்போன இனம் இல்லை அதனால் எங்களுக்கென்று கடமை பொறுப்பு இன்றும் அதிகமாகவே இருக்கின்றது .

எங்களுக்குள் தமிழ் அறிஞர்கள் இருக்கின்றோம், தமிழ் ஆராச்சியாளர்களாகஇருக்கின்றோம் பெருமைக்குரிய விடையம் ஆனால் அதனையும் கடந்து எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தமிழ் உணர்வு அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும் .

அதுதான் இன்றைய காலத்தின் தேவையாகவும் காலத்தின் அவசர அழைப்பாகவும் இருக்கின்றது தமிழன் என்று பேசலாம் ஆனால் தமிழர் உணர்வு என்கின்ற அந்த உள் உணர்வு தீயாகப் பற்றி எரியவேண்டும் தமிழன் என்று நாங்கள் பெரியளவில் பேசி தம்பட்டம் அடிக்க முடியாத நிலைக்கு எங்களின் கைகள் கால்கள் கட்டப்பட்டுள்ளன.

ஆனாலும் எங்களின் உணர்வுகளை யாரும் கட்டுப்படுத்த முடியாதுஎங்களிடம்இருக்கின்றஅந்தத்தமிழ்எண்ணங்களைத் தமிழ் சார்ந்த விழுமியங்களைத் தமிழ் சார்ந்த பண்பாடுகளை நாகரீகங்களை யாராலும் அழித்து விடமுடியாது. ஆகவே இந்த பண்பாடு சிந்திக்க தோன்றுகின்றது.

ஒரு கட்டத்திலே தமிழ் பண்பாடுகளை கட்டிக் காக்கின்ற பாதுகாவலர்களாக இருந்தாலும் எங்களுக்கு என்று தமிழ் உணர்வாளர்கள் இருக்கின்ற பண்பாடு இருக்கின்றது என்கின்ற எண்ணங்களில் இருந்து ஒரு போதும் விலக முடியாது .

எங்களின் பண்பாட்டை எண்ணெய்யும் தண்ணீராயும் கலக்கமுடியாதே அதே போன்று தாமரை இதழிலே விழுகின்ற தண்ணீர் துளி அதனனூடு சேர்ந்து கொள்ளாதோ ஓடும் புளியம் பழமும் போன்று இருப்பது போன்று நாங்கள் தனித்துவமான அதற்காகத்தான் நாங்கள் இந்தப் பண்பாட்டை எங்களின் தமிழ் மொழியின் சிறப்புக்களை நாங்கள் கண்டு பிடிக்க முனைவது போன்று இளைய தலைமுறையினரை பற்றாளர்களாக உணர்வாளர்களாக வளர்க்க வேண்டும்.
- என்றார். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அல்லைப்பிட்டி கடற்பரப்பில் மிதந்துவந்த மர்மப் பெட்டி





யாழ்ப்பாணத்தில் கடலில் அடித்துவரப்பட்டு, கரையொதுங்கிய மர்ம பெட்டி ஒன்றில் இருந்து தொலைத்தொடர்பு சாதனம் மீட்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி கடற்பரப்பில் மிதந்து வந்த மர்ம பெட்டி ஒன்று ஞாயிற்றுக்கிழமை கரையொ, துங்கியுள்ளது.

அதுதொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் கரையொதுங்கிய பெட்டியை திறந்து பார்த்த வேளை அதனுள் தொலைத்தொடர்பு சாதனம் ஒன்று காணப்பட்டுள்ளது.

அதனை மீட்டு பொலிஸ் நிலையம் எடுத்து சென்றுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(05)

# பொதுவேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்து சகலரும் ஆதரிப்பதே வெற்றிக்கான வாய்ப்பு

## கிழக்கு ஆளுநர் கருத்து





ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொதுவேட்பாளரைத் தெரிவுசெய்து அனைவரும் ஒன்றிணைந்து ஆதரிப்பதன் மூலமே வெற்றிக்கான வாய்ப்பாக அமையும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுனருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாளங்குடாவில் புனரமைக்கப்பட்ட வீதி திறந்துவைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதியுதவியுடன் தாளங்குடா கடற்கரை வீதி சுமார் 92 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மு.கோபாலரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டதுடன் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் இணைப்புச்செயலாளர் பூ.பிரசாந்தன், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் தட்சணாகௌரி தினேஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுனர்-

இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் இன்று எந்த கட்சியுமே பலமான நிலையில் இல்லை.

ஒரு பொதுவேட்பாளரை தெரிவுசெய்து அனைத்து கட்சிகளும் ஆதரிக்கும்போது சக்திவாய்ந்த தலைவர் ஒருவரை இந்த நாட்டில் தேர்வுசெய்யமுடியும்.

யார் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதற்கு 51 வீதமான வாக்குகள் தேவையாகவுள்ளது. அவ்வாறான வாக்குகளைப்பெறும் நிலையானது இன்றைய நிலையில் எந்த கட்சியனாலும் கடுமையான போட்டியாகவே இருக்கும்.

அதனால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அனைவரும் ஒன்றிணையும்போது வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளது. - என்றார். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## பல்கலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான நிதியை ஒதுக்க முடியாதுள்ளதால் அடுத்து வரும் வரவு செலவு திட்டத்தின் மூலம் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அடுத்த ஜனவரி முதல் அதனைநடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக புதிதாக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் பல்கலைக்கழகங்களின் கையிருப்பிலிருந்து அந்த நிதியை பெற்றுக் கொடுப்பதற்கும் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

எவ்வாறெனினும் எத்தகைய கொடுப்பனவுகளைவழங்கினாலும் அதற்கு திறைசேரியின் அனுமதி முக்கியமாகிறது. இந்த விடயம் தொடர்பில் நான் பல பேச்சுக்களை நடத்தியுள்ளதுடன் இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களையும் சமர்ப்பித்துள்ளேன்.

ஒரு தரப்பினரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது மற்றொரு தரப்பினரால் பிரச்சினை எழுகிறது. அந்த வகையில் கடந்த ஒருவாரத்திற்கு முன் அமைச்சரவை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியிலேயே நாம் கல்வி சாரா ஊழியர்களை கடமைக்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளோம்.

நேற்றைய தினமும் அவர்களில் ஒரு தொழிற்சங்கத்தினர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அந்தப் பேச்சில் எழுத்துமூலஉறுதிமொழியொன்றை வழங்குவதற்குநாம்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிட்டு கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற முடியாது என்பது, இந்த நாட்டின் நாடாளுமன்றத்திற்கும் அரசியலமைப்பிற்கும் எதிரான தீர்மானமாகவே கருத முடியும் என நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தேன்.

ஆண்களுக்குநிகரானஉரிமைகளைபெண்களுக்குவழங்குவதே எங்கள் நோக்கம். சர்வதேச பெண்கள் அமைப்புகளின் அனைத்து ஒப்பந்தங்களிலும் இது சேர்க் கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை அல்லது வேறு எந்த அமைப்பும் தலையிட முடியாது.

அந்தப்பணியை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளோம். எனவே இது தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டாம்என இன்று நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தேன். அதேபோன்று, அந்தத் தீர்மானத்தினால் பௌத்த மதத்தின் பாதுகாப்பு நீக்கப்படலாம் என்பதால் அந்தக் கருத்தை ஏற்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது நாம் அது குறித்து அவதானம் செலுத்தி செயற்பட்டு வருகிறோம் என்றார்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனஜீவராசிகள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்புச் சங்கம் உட்படப் பல தரப்பினராலும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மத்திய ஆசிய வான்பரப்பில் தெற்கு பயணப்பாதையில் வருடாந்தம் 15 மில்லியன் பறவைகள் சஞ்சரிக்கும் முக்கிய கேந்திரப் பகுதியாக இலங்கை காணப்படுவதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு பருவகாலத்தில் சுமார் ஒரு மில்லியன் பறவைகள் வருவதாகவும், இந்த பாதையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், பறவைகளின்நடமாட்டத்தில்குறிப்பிடத்தக்க இடையூறு ஏற்படும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றாலை திட்டத்திற்கு அரசியல் மற்றும் வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் மன்னார் தீவு தெரிவு செய்யப்பட்டதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த தீவை தெரிவு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான அல்லது வேறு விசேட காரணம் எதுவும் இல்லை எனவும், குறித்த நிலப்பரப்பு மிகவும் உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் பிரதேசம் எனவும் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது இந்திய அதானி நிறுவனம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரொமேஷ்டிசில்வா ஆஜரானதுடன் மனுதாரர்கள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன ஆஜரானார்.

சட்டமா அதிபர் சார்பில் கலாநிதி அவந்தி பெரேரா முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொலைத்தொடர்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

## வசூலிக்காத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம் ஒரு கோடிக்கும் அதிக வரி செலுத்த வேண்டிய முன்னணி வியாபாரிகள் ஒரு இலட்சம் பேருக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வரிச் சலுகையைவழங்காமல்இருந்தால் புதிய வரியை அறிமுகப்படுத்தும் தேவை ஏற்பட்டிருக்காது.

புதிய வரி மூலம் ஆளும் தரப்பு 60 ஆயிரம் கோடி வருமானத்தை எதிர்பார்க்கிறது. ஆனால் ஒரு இலட்சத்தி 20 ஆயிரம் கோடி ரூபா வரி செலுத்துவது தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் வரி செலுத்தாமல் இருப்பது, வரி செலுத்துவதை தவிர்த்து வருவது மற்றும்வரிநிவாரணம்வழங்குதல் இவற்றை சரி செய்துகொண்டால், ஆளும் தரப்பு அறிமுகப்படுத்த இருக்கும் வரி தேவைப்படாது என நாங்கள் நம்புகிறோம்.

ஒரு கோடி ரூபாவை தாண்டிய 4 ஆயிரத்து 200 பேர் வரி செலுத்துவதை தவிர்த்துள்ளனர். அவர்களின் வரிகளை அறவிட்டுக் கொள்ள ஏன் ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது என கேட்கிறேன்.

அதேபோன்று சாராய வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் 23 பேரில் 5பேர் வரி செலுத்துவதை தவிர்த்து வரும் சந்தர்ப்பத்தில் அவர்களின் சாராய விற்பனை அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யக்கூட ஆளும் தரப்புக்கு முடியாமல் போயிருக்கிறது. இவர்கள் 700 கோடி ரூபா வரி செலுத்துவதை தவிர்த்துள்ளனர். இவர்களின் அனுமதி பத்திரத்தை இரத்துச்செய்திருந்தால், நிச்சயமாக இவர்கள் வரி செலுத்த நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

எனவே வரி செலுத்துவதை தவிர்த்து வருபவர்களிடமிருந்து முறையாக வரியை அறவிட்டுக் கொள்ளவும், வரிசெலுத்த தகுதிஇருந்தும் அவர்கள் இதுவரை வரி கொள்கைக்குள் உள்வாங்கப்படாமல் இருப்பவர்களை வரிக் கொள்கைக்குள் உள்வாங்கிக்கொள்ள நடவடிக்கை எடுப்பதன் மூலமும் ஆளும் தரப்புக்குத் தேவையான வருமானத்தைஅதிகரித்துக்கொள்ள முடியும்என நாங்கள் நம்புகிறோம்.

அதனை ஏன் ஆளும் தரப்பினால் செய்ய முடியாது என்பதை நிதி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி இது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனகேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கை விடுத்தனர்.

அதனைத்தொடர்ந்து குறித்த ஆர்ப்பாட்டத்தினை கலைப்பதற்கு பொலிஸார் அறிவிப்புக்களைச் செய்தனர். எனினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து செல்ல மறுத்ததை அடுத்து நீர்த்தாரைப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதேவேளை, அரச சேவை ஓய்வுபெற்ற தொழிற்சங்க கூட்டமைப்பும் நேற்று பத்தரமுல்லையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 7,000 ரூபா கொடுப்பனவு மற்றும் அக்ரஹார காப்புறுதிகொடுப்பனவுஆகியவற்றை பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## சூட்சுமமாகப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறந்த உடலை புதைப்பது தொடர்பான சர்ச்சை விடயத்தை இரண்டாவது பந்தாக வீசினார். அத்துடன் வாடகை வீடுகள் வரி தொடர்பான விடயத்தை மூன்றாவது பந்தாக வீசினார். இதில் முதலாவது பந்தான நீதிமன்றத்திற்கு சவால் விடுவது உள்ளது. தந்திரமாகவே மற்றைய பந்துகளையும் வீசியுள்ளார்.

பெண்கள் வலுப்படுத்தல் தொடர்பான விடயத்தில் பாலின மாற்றத்திற்கு அனுமதி வழங்கும் வகையில் சட்டங்கள் வருவது சிக்கலுக்குரியது. உயிரியல் ரீதியிலான பெண்களை பலப்படுத்துவது சரியானது. ஆனால் அந்தப் போர் வையில் பாலின மாற்று வியாபாரத்திற்கு இடமளிப்பதை அனுமதிக்க முடியாது. உயர் நீதிமன்றத் தீர்மானத்திற்கு சவால் விடுவது தவறானதே. அப்படியென்றால் உயர்நீதிமன்றத்தை மூடிவிடுங்கள். அவ்வாறான உயர்நீதிமன்றத்தை வைத்திருப்பதில் பயனில்லை.

அத்துடன், வரிக்கு மேல் வரி அறவிடுவது தவறுதான் என்றார்.

# மூவர் கைது

சுயாதீன ஊடகவியலாளர் பிரதீபனின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பிரதீபனின் வீட்டை அடையாளம் காட்டியவர் என்றும் மற்றைய இருவர் தாக்குதலை நடத்தியவர்கள் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைதானவர்களில் ஒருவர் பிரதீபனின் உறவினர் முறையானவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலியில் உள்ள பிரதீபனின் இல்லத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் வீட்டில் இருந்த உடமைகளுக்கு அடையாளம் தெரியாத ஒரு கும்பல் நள்ளிரவில் தீ வைத்துவிட்டுத்தப்பிச்சென்றிருந்தது.

வெளிநாட்டில் இருந்த பணம் அனுப்பப்பட்டுகூலிப்படையினரைக் கொண்டே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், பிரதீபனின் வீடு தாக்கப்பட்டதைக் கண்டித்து யாழ். நகரில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. வடக்கு மாகாண ஊடகவியலாளர்களால் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தத்தாக்குதல் ஊடகத் துறைக்கான அச்சுறுத்தல் என்றுகண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

## பாலின....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டுபெரும்பான்மைஆதரவுடன், மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபைக்கு அவர் அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'பாலின சமத்துவம்' சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின்வியாக்கியானம் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை சபைக்கு அறிவிக்கிறேன்.

சட்டமூலத்தின் ஒருசில உறுப்புரைகள் அரசமைப்பின் 12ஆவது பிரிவுக்கு முரணானது . இந்த மசோதாவின் உட்பிரிவு 2 இல் உள்ள 3,4 உடன் இணைத்து வாசிக்க வேண்டிய 9, 10, 12, 14(1) (இ) மற்றும் 27(1)ஆகியவற்றுடன் முரணானது.

இந்தசட்டமூலத்தின் உட்பிரிவு2 இல் உள்ள 3 மற்றும் 4 சரத்துக்கள் சேரத்து வாசிக்க வேண்டிய 9, 10, 12, 14(1)(இ) மற்றும் 27(1)ஆகியவற்றுடன் முரணானது. அத்துடன் 3, 4, 9 ,10 ஆகியன அரசமைப்புக்கு முரண். மேலும் அவை மசோதாவின் பிற விதிகளிலிருந்துபிரிக்கமுடியாதவை.

அரசமைப்பின் 83 மற்றும் அல்லது பிரிவு 84 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் அரசமைப்பின் 80ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தச் சட்டமூலத்தை முழுமையாக ஒட்டுமொத்தமாக சட்டமாக்க முடியாது என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர்களின் மொத்தஎண்ணிக்கையில்மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாதவர்களின்ஆதரவுஇருக்கவேண்டும் (வருகை தராதவர்கள் உட்பட). மற்றும் உயர் நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை முழுமையாக நிறைவேற்றாமல் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது. உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள திருத்தங்களை செயற்படுத்தாமல் அந்த ஏற்பாடுகளை நிறைவேற்றுவதாயின் பெரும்பான்மை ஆதரவுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# பாரதி வித்தியாலய மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு









(வி.ரி.சகாதேவராஜா)

திருகோணமலைமூதூர்பாரதி மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களில் வசதி குறைந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகள் இணைந்தகரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு பாடசாலையின் அதிபர் பு. ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெற்றது.

'ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள்அமைப்புபலகஸ்ரப்பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக கற்றல் உபகரணங்களை வழங்கிவருகிறது.

இப் பாடசாலையானது 139 ஆவது பாடசாலையாகவும் இலங்கையில் இனமதம் மொழி பாராமல் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் மற்றும் மேலதிக கல்வி செயற்பாட்டிற்கான நிதி உதவியை வழங்கி வருகின்றது.

மேலும் இந் நிகழ்வில் ஓய்வுபெற்றகோட்டக்கல்விஅதிகாரி இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான, சி.காந்தன், லோ. கஜரூபன், எஸ்.சுரேஸ், மா.ஜெகனாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# காட்டுப் பாதையைத் திறப்பதில் தீர்க்கமான முடிவுகள் வேண்டும்

## ஜனாதிபதி மற்றும் ஆளுநரிடம் கிழக்கு கோரிக்கை

கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை திறப்பதில் தீர்க்கமான தீர்வு தரவேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் கிழக்கு ஆளுநரிடம் கிழக்கிலுள்ள இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இந்து அமைப்புகள் சமூக அமைப்புகள் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளன.

அத்தோடு நாட்குறைப்பு தொடர்பில் தமது கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன.

சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை குழுவினரும் காட்டுப்பாதைதிறப்பதில்பாரபட்சம்பாகுபாடு இல்லாமல் பத்து நாள்களுக்கு முன்னரே திறக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

இதேவேளை ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து கதிர்காம காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையைக் கண்டித்து செவ்வாய்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர், கிழக்குமாகாண ஆளுநர், நாட்டின் ஜனாதிபதி மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட பலருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து இடம்பெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் ஆலயத்தின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஆலயம் நோக்கிய பாத யாத்திரையை மக்கள் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி லாகுகல பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள உகந்தை காட்டுப்பாதை பக்தர்களுக்காக திறக்கப்பட்டு, ஜூலை 11ஆம் திகதி மூடப்படுவதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் (07.06.2024) அன்று உகந்தை முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து, கதிர்காமம் ஆலயத்தில் கடந்த 12ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் உகந்தை காட்டுப்பாதை திறக்கும் திகதி பிற்போடப்பட்டு, எதிர்வரும் ஜூலை மாதம் 02ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு, 14ஆம் திகதி மூடப்படவுள்ளதாக மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்னாயக்க அறிவித்திருக்கிறார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி, 30ஆம் திகதியினை கருத்திற்கொண்டு பக்தர்கள் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட நிலையில், இந்த திகதி மாற்றமானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளதாக சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

காட்டு வழியாக பாதயாத்திரை மேற்கொள்ள தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய கால எல்லை போதாமல் உள்ளதாகவும் பல சமூக அமைப்புகள் தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்து வருகிறார்கள்.

அந்தவகையில்ஆலையடிவேம்புபிரதேசஅனைத்து இந்து ஆலயங்களும் கதிர்காம காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்தும் குறித்த தீர்மானத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியுமே மகஜர் கையளிக்க தீர்மானம் மேற்கொண்டிருந்தார்கள்.

(05)

# 'வெல்வோம் ஸ்ரீலங்கா' சேவையில் அலி சப்ரி ரஹீம் எம.பி. பங்கேற்பு





(எம்.சியாஜ்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் சிலாபம் ஷேர்லி கொரேயா விளையாட்டரங்கில் இருநாள்கள் நடைபெற்ற 'வெல்வோம் ஸ்ரீலங்கா' நடமாடும் சேவைவேலைத்திட்டத்தில்;புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன்போது புத்தளம் மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச செயலகங்களில் காணப்படும்





பாடசாலைகளுக்கு 'ஸ்மார்ட் போட்' வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் எண்ணக்கருதிட்டமான டிஜிற்றல் மயமாக்கலுடன் தொடர்புடைய புதிய தொழில் உலகத்திற்கு ஏற்ற ஸ்மார்ட் தொழிலாளர்களை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட இந்த நடமாடும் சேவை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காராவின் தலைமையில் நாடளாவிய ரீதியில் தேசிய வேலைத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'வெல்வோம் ஸ்ரீலங்கா' மக்கள் நடமாடும் சேவை, இது வரை பதினாறு மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுள்ளதுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும் பெற்று வருகின்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனைத்து இணை நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நடத்தும் இந்நடமாடும் சேவையால் பின்வரும் விடயங்கள் உள்ளிட்ட பலவேலைத்திட்டங்கள்மக்களுக்கு வழங்கப்படுகின்றன

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனைத்து நிறுவனங்களும் இத்திட்டத்தில் கலந்து சிறப்பிக்க உள்ளன. எனவே, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மற்றும் அதன் இணை நிறுவனங்களின் கொழும்பு பிரதான காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய சேவைகள் சிலவற்றை இப்பகுதி மக்கள் இந்த நடமாடும் சேவையின் ஊடாக பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# அட்டாளைச்சேனையில் யாத்திரீகர்களுக்கு இஸ்லாமியர் பழரசம் வழங்கிக் கௌரவம்



(வி.ரி. சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 37ஆவது நாளில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அட்டாளைச்சேனையில் பயணித்தபோதுஇஸ்லாமியபெருமக்கள்அடியார்களுக்கு பழரசம் வழங்கி கௌரவித்தனர்.

நேற்று காலை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு தரிசனம் செய்தனர்.

அங்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் கி.ஜெயசிறில் குடும்பத்தினர் அடியார்களுக்கு காலை ஆகாரம் வழங்கினர்.

மேலும் பல அடியார்களுக்கு பாலமுனை



அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று போன்ற இடங்களில் சென்று காலை ஆகாரம் வழங்கினர். யாத்திரைக்குழு ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜாவும் உடனிருந்தார்.

பின்னர் அடியார்கள் அக்கரைப்பற்று சென்று தங்கியிருந்தனர்.

இன்று தம்பட்டை தம்பிலுவில் திருக்கோவில் சென்று விநாயகபுரத்தில் தங்குவார்கள்.

எதிர்வரும் 29ஆம் திகதி உகந்தை மலையை அடைய இருக்கின்றார்கள். 30ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள். (05)



இன மத நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாக இச் சம்பவம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

# மும்முனைப் போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால் தமிழ் பேசும் மக்களின் வாக்குப்பலம் பிரதானமாகும்

## சுமந்திரன் எம்.பி. இடித்துரைப்பு

ஜனாதிபதி தேர்தலில் மும்முனைப் போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால் தமிழ் பேசுகின்ற மக்களின் வாக்குப்பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. தமிழ்பொது வேட்பாளர் நிறுத்தும்விடயத்தில்தமிழரசுக்கட்சியின்மத்தியகுழுவில் முடிவுகள் எடுக்கப்படவில்லை என அக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குதெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர்விடுதியில்ஞாயிற்றுக்கிழமைஇடம்பெற்றது., அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்பொதுவேட்பாளர் விடயத்தில் உரிய நேரத்தில் தீர்மானம் எடுப்போம். தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்று இன்னமும் தெரியாது. அவர்களுடைய தேர்தல் அறிக்கைகள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்பின்னர்தீர்மானிப்பதாகவேமுடிவெடுத்திருந்தோம்.

அத்துடன்தங்களைவேட்பாளர்களாகஅறிவித்துள்ள இருவர் தமிழரசுக்கட்சியின் தலைமைகாரியாலத்திற்கு வந்து எங்களுடன் பேச்சு நடாத்தியுள்ளனர். இது ஓர் ஆரம்பகட்ட பேச்சு. நாங்கள் தொடர்ந்தும் இவ்வாறானவர்களுடன் பேசுவோம். ரணில் விக்கிரமசிங்க தன்னை வேட்பாளராக அறிவித்தால் அவரோடும் பேசுவோம்.

முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் இதுவரை அதிகாரபகிர்வு தொடர்பாக பொதுவெளியில் சொல்ல கூச்சப்பட்டுக்கொண்டிருந்த வேட்பாளர்கள் போட்டிபோட்டுக்கொண்டு 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவோம் என்று சொல்லத்தலைப்பட்டுள்ளனர்.

அது முழுமையான தீர்வு அல்ல. அதனை நாம் ஏற்கவில்லை. ஆனால் அரசமைப்பில் உள்ளதையாவது அமுல்படுத்தவேண்டும் என்பதை நாம் சொல்லியிருக்கின்றோம். எனவே அந்த பேச்சுகள் ஆரோக்கியமாக இருந்தது. அவர்கள் சொன்னதை செய்வார்களா என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கின்றது.

மும்முனைப்போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால் தமிழ் பேசுகின்ற மக்களின் வாக்குப்பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. மிகவும் கவனமாக எமது பேரம்பேசுதலை நடத்தவேண்டும். சந்தர்ப்பத்தை சரியாக உபயோகப்படுத்தவேண்டும் என்ற கருத்தோடு நாங்கள்இருக்கின்றோம்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக கடந்த மத்தியகுழு கூட்டத்திலேயே பலர் எதிரான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். எனவே இன்று அதைப்பற்றி பேசவில்லை. மக்களது கருத்துக்களையும் அறிந்து தனிப்பட்ட கருத்துக்களை சொல்வதற்கான சுயாதீனம் அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன சிவாஜிலிங்கம் வழமையாகவே நிற்பவர். பழக்கதோசத்தில் அவர் நிற்கலாம் அதில் எனக்கு பிரச்சினையில்லை. - என்றார்.

(05-100)

# 70 வயது தந்தையை தாக்கிய மகள் கைது

## மாத்தளையில் சம்பவம்

மாத்தளை, நாவுல பிரதேசத்தில் 70 வயது தந்தையைத் தாக்கினார் எனக் கூறப்படும் மகள் கைது செய்யப்பட்டுள்ளார் என நாவுல பொலிஸார் தெரிவித்தனர்.

29வயதுடையமகளேஇவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் போது, இவர் ஆணொருவரை தனது வீட்டிற்கு அழைத்து வந்துள்ள நிலையில் அவரை வீட்டில் தங்க வைக்க முற்பட்ட போது தந்தை அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான தந்தை இது தொடர்பில் நாவுல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரைவிளக்கமறியலில்வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(05)

# போதைப் பொருள்களுடன் 852 பேர் பொலிஸால் கைது

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக் கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருள்களுடன் 12 பெண்களும் 840 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் 25 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், போதைப்பொருள்களுக்குஅடிமையாகியுள்ள 03 பேரை புனர்வாழ்வு நிலையங் களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 334 கிராம் ஹெரோயின், 161 கிராம் ஐஸ், 227 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிய கைதி போதைப்பொருளுடன் கைது

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற கைதியொருவர் போதைப்பொரு ளுடன் கிளிநொச்சி பகுதியில் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மடத்தடி பகுதியைச்சேர்ந்த 23 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி அக்கராயன் காட்டுப்பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்தபோது குறித்தநபர் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது குறித்த நபரிடமிருந்து 3.800 கிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டதுடன், மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரிடம் குறித்த நபர் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் யாழ்.மாவட்டத்தில் பல குற்றச்செயல்களுக்காக நீதிமன்றங்களால் திறந்த பிடியாணைவிதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்தமேமாதம் 12ஆம்திகதி குறித்த கைதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தார். இதன் காரணமாக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள்பணியிடை நீக்கம்செய்யப்பட்டிருந்தனர். (05)

# ஆடை விற்பனை நிலையமொன்றில் திருட்டுக் குறித்து தம்பதியர் கைது

பாணந்துறைநகரத்திலுள்ள ஆடை விற்பனை நிலையமொன்றை உடைத்து 26 லட்சம் ரூபா பெறுமதியான ஆடைகளைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டில் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

பாணந்துறைபிரதேசத்தைச் சேர்ந்த 43 மற்றும் 37 வயதுடைய தம்பதியினரே கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்த தம்பதியினர் ஆடை விற்பனை நிலையத்தின் பின்புறத்தில் உள்ள ஜன்னலை உடைத்து உள்நுழைந்து திருடியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தம்பதியினரை பாணந் துறை நீதிமன்றில் ஆஜர்ப டுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# குருந்தூர்மலையில் சிவ வழிபாடு புலனாய்வாளர்கள் கண்காணிப்பு









குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் சிவ வழிபாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு குமுழமுனை தண்ணிமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள குருந்தூர்மலை பகுதியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் வழிபாடுகள் தொடராக நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் சிவனை தரிசிப்பதற்காக ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலர் நேற்று காலை 10 மணியளவில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த வழிபாட்டில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஞா.யூட்சன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.ஜெகதீசன், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

தொல்லியல் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைய சேதம் ஏற்படுத்தாத வண்ணம் வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தொடர் போராட்டத்தில் குதிப்போம் கிராம அலுவலர்ர்கள் எச்சரிக்கை

எதிர்வரும் 24 ஆம் திகதி தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என கிராம உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயத்தை இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

அத்தோடு, எதிர்வரும் 24 ஆம் திகதி அதிபர் காரியாலயத்தில் தங்களது பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தற்பொழுது சட்டப்படி வேலை என்ற தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு போன்றவற்றை மறுசீரமைத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் முன்வைத்துள்ளனர்.

இதனடிப்படையில், நபர் ஒருவரின் மரணத்தின் போது வழங்கப்படும் ஆவணங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், கிராம சேவை சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பேச்சுகள் தோல்வியடைந்தால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் நந்தன ரணசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# திருடப்பட்ட ஓட்டோவை வாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் கைது

காலி, ரத்கம பிரதேசத்தில் திருடப்பட்ட 11 லட்சம் ரூபா பெறுமதியான ஓட்டோ ஒன்றை ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்தார் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ரத்கம பொலிஸாரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஓட்டோ ரத்கம , கம்மெத்தகொட பிரதேசத்தில் கடந்த 16 ஆம் திகதி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது இனந்தெரியாத சிலரால் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் ஓட்டோவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் முகநூலில் வெளியிடப்பட்ட விளம்பரம் ஒன்றின் ஊடாக இந்த ஓட்டோவை கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மதுபானசாலை திறப்புக்கு எதிராக மூதூர் இருதயபுரத்தில் ஆர்ப்பாட்டம்





மூதூர் இருதயபுரம் பிரதேசத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ள மதுபானசாலையின் அனுமதியை உடனடியாக இரத்து செய்யுமாறு வலியுறுத்தி நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது .



இந்த ஆர்ப்பாட்டம் மூதூர் மணிக்கூண்டுகோபுர சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு மூதூர் பிரதேசசெயலகம் வரை நடைபாதையாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சர்வமத தலைவர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள், மற்றும் இருதயபுர பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மூதூர் பிரதேச செயலாளருக்கு பொதுமக்கள் சார்பாக மதுபானசாலையை மூடுமாறு வலியுறுத்தி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் அ'புரத்தில் கைது

அநுராதபுரம் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர் அநுராதபுரம் பிள்ளையார் சந்தி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் , மிஹிந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு

பண்டாரவளை - பதுளை வீதியில் திக்கராவ வளைவில் பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி விபத்தில் பண்டாரவளையில் இருந்து வெல்லவாய நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் சறுக்கி பஸ்ஸின் பின் சக்கரத்தில் சாரதியின் தலை சிக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற போது அப்பகுதியில் சிறியளவில் மழை பெய்ததாக கூறப்படுகிறது.

உயிரிழந்த இளைஞர் வெல்லவாய பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (05)

## கிளிநொச்சியில் சடலம் மீட்பு

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட நெத்தலியாற்று பாலத்திற்கருகில் ஆற்றில் ஆணொருவரின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது. புளியம்பொக்கணை முசிலம்பிட்டியைச்சேர்ந்த 27வயதுடைய சம்சுதீன் அன்பர் என்ற இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. சடலத்தில் அடிகாயங்களும் காணப்படுகின்றன.

மேற்படி சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05 - 113)

## கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தி மாதிரிச் சித்திரைப் புத்தாண்டு விழா



(நூருல் ஹுதா உமர்)

இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் இரண்டு மாணவர்களின் மாதிரிச் சித்திரைப் புத்தாண்டு விழா பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத் தலைமையில் இடம்பெற்றது.







ஆரம்ப பிரிவு தலைவரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசனும், விசேட அதிதியாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஜே.எல். பாஸிலும், சிறப்பு அதிதியாக கல்முனைப்பொலிஸ்நிலையத்தின் சிறுவர் பெண்கள் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பெண் பொலிஸ் பரிசோதகர் திருமதி ஏ.எம்.எச்.சீ. அபேரட்ணவும்கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் மூலம் பௌத்த, இஸ்லாமிய, இந்து மற்றும் கிறிஸ்தவ மதத்தவர்களின் கலை,கலாசாரங்கள், உடை மற்றும் உணவுவகைகள் என பல வகையான விடயங்களை மாணவர்கள்அறியக்கூடியவாய்பை ஏற்படுத்துவதோடு பிற மதங்களை மதிக்கும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகின்றன.

அத்தோடு இவ்விழாவில் புத்தாண்டு விளையாட்டுக்களும், பல் மத உணவு வகைகளும் மாணவர்களால்பரிமாறப்பட்டதுடன் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2024இல் வெளியிடப்பெற்றது